சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை

<u>அசல் வழக்கு எண். 67/2026</u>

<u>CNR No.TNTH00001552026</u>

SBI வங்கி, உத்தமபாளையம் கிளை,
அதன் கிளை மேலாளர் .... வாதி

/எதிர்/

மதன் .... பிரதிவாதி

இவ்வழக்கு 10.07.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சசிக்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

வாதிக்கு பிரதிவாதி வழக்குத்தொகை ரூ.2,75,625/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை 12.60% வட்டி செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

வாதி வங்கியில் பிரதிவாதி, அவரது தனிப்பட்ட காரணங்களுக்காக வேண்டி Xpress Credit திட்டத்தின் கீழ் ரூ.4,50,000/–ஐ கேட்டு கடந்த 20.09.2021 ம் தேதி வாதி வங்கியை அணுகியதில் வாதி வங்கி கடனை வழங்க முன் வந்தது என்றும், அவரின் வேண்டுகோளை ஏற்று கடந்த 21.09.2021 ம் ரூ. 4,50,000/–ஐ வழங்கியது என்றும், அதன்பேரில் வாதி வங்கிக்கு தேவையான அனைத்து கடன் ஆவணங்களையும் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கடனுக்கு பிரதிவாதி 12.60% வட்டி மற்றும் 72 மாதத்தில் திருப்பி செலுத்த ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்கண்ட கடன் தொகைகளின் தவனைகள் தவறும்பட்சம் அபராத வட்டி சேர்த்து செலுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேலும், 02.01.2026 ம் தேதி வரை ரூ.2,73,360/–

நிலுவையில் உள்ளது என்றும், மேலும், வாதி வங்கியில் நிலுவையில் உள்ள பிரதிவாதி பெற்ற அசல் மற்றும் வட்டித்தொகைகளை செலுத்தக்கோரி பலமுறை நேரிலும் ஆட்கள் மூலமும் துயர்ந்தும், பிரதிவாதி யாதொரு தொகையும் செலுத்தாமல் செலுத்தி விடுவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வந்தார் என்றும், 12.01.2026ம் தேதி பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றும், ஆனால் கடனை அசல் மற்றும் வட்டியுடன் செலுத்தவில்லை என்றும், எனவே, வாதி வங்கியால் பிராதில் கண்ட கடன் தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் திரும்பப்பெற வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரதிவாதி அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

4) <u>பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வு</u>

1. வாதி வங்கி கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கக் கூடியதா?

5) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் வாதி வங்கியின் கிளை மேலாளர் சுபமணிகண்டன் வாசா 1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக 20.09.2021ம் தேதி வாதி வங்கிக்கு பிரதிவாதி சமர்பித்த விண்ணபத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 21.09.2021ம் தேதி பிரதிவாதி சமர்ப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் வாதி வங்கி வழங்கிய அனுமதி கடிதத்தின் அசல் வா.சா.ஆ.–2 ஆகவும், 21.09.2021–ம் தேதிய பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ள கடன் ஒப்பந்தம் வா.சாஆ.–3 ஆகவும், 02.01.2026 வாதி வங்கியில் உள்ள பிரதிவாதியின் வங்கிக் கணக்கு அறிக்கை வா.சா.ஆ–4 ஆகவும், 12.01.2026ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.5 ஆகவும், 13.01.2026ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான Track Consignment வா.சா.ஆ.6 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) மேலும், மேற்படி வா.சா.1 வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, பிரதிவாதியினுடைய தனிப்பட்ட காரணங்களுக்காக கடந்த 20.09.2021ம் தேதி பிரதிவாதி கடன் விண்ணப்பம் கொடுத்து அது பரிசீலனை செய்யப்பட்டு 21.09.2021ம் தேதியில் வாதி வங்கி பிரதிவாதிக்கு Xpress Credit திட்டத்தின் கீழ் கடன் வழங்கி அதற்காக அவர்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான கடன் ஆவணங்களை எழுதிக்கொடுத்து அதன் பின்னர்

அசல் மற்றும் வட்டி தொகைகளை திரும்ப செலுத்தவில்லை என்ற விபரம் மேற்படி ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

7) மேலும், பிரதிவாதி ஒத்துக்கொண்டபடி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பது வா.சா.ஆ.4 கணக்கு அறிக்கையை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது. எனவே பிரதிவாதி வாதி வங்கியில் தவணை திட்டத்தின் கீழ் கடன் பெற்றுள்ள நிலையில் அவர் ஒத்துக்கொண்டபடி கடன்தொகையை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் தீர்வு கண்டு, வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு செலவுத்தொகையுடன் கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8) அதே வேளையில் பிரதிவாதியுடைய தனிப்பட்ட காரணங்களுக்காக அவர், வாதி வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ள நிலையில், அவர் பெற்ற Xpress Credit தவணை கடன் மற்றும் அவரது குடும்ப சமூக சூழ்நிலையை கருத்தில் கொண்டு வாதி வங்கி 12.60% சதவிதிக வட்டி கோரியிருந்தாலும் நீதியின் நலனின் பொருட்டு 9 சதவிகித வட்டி மட்டுமே கல்விக்கடனுக்காக வாதி வங்கிக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9) இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி வாதிக்கு ரூ.2,75,620/-(Rounded off) மும் அசல் தொகை ரூ.2,73,360/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 27.07.2026ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/-M.சிவாஜி செல்லையா

சார்பு நீதிபதி,

உத்தமபாளையம்.

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா.1 – சுபமணிகண்டன் (வாதி வங்கி கிளை மேலாளர்).

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.09.2021 | கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 21.09.2021 | அனுமதி கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 21.09.2021 | தவணைக் கடனிற்கு பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள கடன் ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 02.01.2026 | கணக்கு அறிக்கை | அசல் |
| வா.சா.ஆ.5 | 12.01.2026 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 13.01.2026 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான Track Consignment | இணைய நகல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>

– இல்லை –

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.67/2026
சீரான தீர்ப்புரை
நாள் 27.07.2026

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை

<u>அசல் வழக்கு எண். 67/2026</u>

<u>CNR No.TNTH00001552026</u>

SBI வங்கி, உத்தமபாளையம் கிளை,
அதன் கிளை மேலாளர் .... வாதி

/எதிர்/

தேனி மாவட்டம், தேனி தாலுகா, காட்டுநாயக்கன்பட்டி, கதவு எண்.2, வார்டு எண். 38, வடக்கு தெருவில் வசித்து வரும் சுப்பிரமணி அவர்கள் மகன் இந்து சுமார் 34 வயதுள்ள மதன்.

.... பிரதிவாதி

வாதிக்கு பிரதிவாதி வழக்குத்தொகை ரூ.2,75,625/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை 12.60% வட்டி செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு எழுந்த நாள் | - | 17.02.2026 |
| வழக்குமூலம் எழுந்த நாள் | - | 20.09.2021, 21.09.2021, 01.06.2025, 12.01.2026 ஆகிய தேதிகளில் உத்தமபாளையம் கிளையில் உற்பத்தி. |
| தாவா மதிப்பு | - | ரூ. 2,75,625/– |
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | - | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 22–ன் படி ரூ.8,269/– செலுத்தப்பட்டுள்ளது, |

இவ்வழக்கு 10.07.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சசிக்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்பாணை

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. |
| 2 | பிரதிவாதி வாதிக்கு ரூ.2,75,620/−(Rounded off)மும் அசல் தொகை ரூ.2,73,360/−க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 3 | இவ்வழக்கின் செலவுத்தொகை ரூ.12,031/-ஐ வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |

## செலவுத்தொகைப்பட்டியல்

| | | | வாதி தரப்பில் | பிரதிவாதி தரப்பில் |
|---|---|---|---|---|
| 1 | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | : | 8269.00 | |
| 2 | விண்ணப்பத்திற்கு | : | 10.00 | |
| 3 | வக்காலத்து நாமாவுக்கு | : | 10.00 | |
| 4 | வழக்கறிஞர் கட்டணம் (சீனியர்) | : | 2653.00 | |
| 5 | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | : | 35.00 | |
| 6 | இடையில் கொடுக்கப்பட்ட மனுக்களின் செலவு தொகை | : | 100.00 | செலவுத்தொகைப்பட்டில் தாக்கல் செய்யப்படவில்லை |
| 7 | பிறாசஸ் தயாரித்தல் பீஸ் | : | 20.00 | |
| 8 | பிளிடிங் சார்ஜ் | : | 50.00 | |
| 9 | வழக்கறிஞர் கட்டணம் (ஜீனியர்) | : | 884.00 | |
| | மொத்தம் | | 12031.00 | |

2026ம் வருடம் ஜுலை மாதம் 27−ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

sd/−M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.67/2026
தீர்ப்பாணை
நாள் 27.07.2026